**செ.வெ.எண் - 13** **நாள்: 05.10.2021**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 2021-2022 -ஆம் ஆண்டில் கரீப் KMS சாகுபடி குறுவை பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு, விவசாயிகள் பயன்பெறும் வகையில், இரண்டாம் கட்டமாக, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில், குலமாணிக்கம் மற்றும் அழகியமணவாளன் ஆகிய கிராமங்களில், 06.10.2021 முதல் நேரடி கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரியலூர் வட்டத்தில், குலமாணிக்கம் மற்றும் அழகியமணவாளன் ஆகிய கிராமங்களில், 06.10.2021 முதல் நேரடி கொள்முதல் நிலையம் பயன்பாட்டிற்கு வர உள்ளதால், அருகில் உள்ள விவசாயப் பெருமக்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பயன்படுத்தி பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**